## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 163/2024 |
| Deposition of Witness | : | PW– 9 |
| Name | : | ராஜேந்திரன் |
| Father Name | : | ராமசாமி |
| Village | : | காங்கேயம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 52 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17.02.2026

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது காங்கேயம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்ட உதவி ஆய்வாளர் திரு.தேவராஜ் அவர்கள் பணி ஓய்வு பெற்றுவிட்டதால் ஆவணங்கள் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 11.04.2024 ஆம் தேதி காங்கேயம் காவல் நிலைய முதல் நிலைக் காவலர் முத்துக்குமார் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது காங்கேயம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற வலுப்பூரசாமி, தங்கமணி மற்றும் குப்புச்சாமி ஆகியோர்களது அசால்ட் இண்டிமேசனை பெற்று அங்கு சென்று பார்த்தபோது அவர்கள் திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றுள்ள விபரம் தெரிந்து 12.04.2024 ஆம் தேதி அங்கு சிகிச்சையில் இருந்த தங்கமணி என்பவரை விசாரித்து வாக்குமூல புகார் பெற்று பின்னர் நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப காங்கேயம் காவல் நிலைய குற்ற எண்.197/2024 சட்டப்பிரிவு 294(b), 323, 506(1) இதச மற்றும் 4 of TNPHW வின் கீழ் வழக்கு பதிவு செய்து அதன் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும் மற்றொரு நகலை புலன்

விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திரு.தேவராஜ் அவர்கள் பார்வைக்கு வைத்தார். **( முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

3. பின்னர் வழக்கு கோப்புகளை உதவி ஆய்வாளர் திரு.தேவராஜ் அவர்கள் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 12.04.2023 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நாகராஜ் மற்றும் ராஜ்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேலும், மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அன்றைய தினம் காலை 11.00 மணிக்கு பார்வை மகஜர் 2 மற்றும் வரைபடம் 2 தயார் செய்துள்ளார். **அந்த 2 வது பார்வை மகஜர் அ.சா.ஆ.7 மற்றும் 2 வது மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்னர் சாட்சிகள் தங்கமணி, வலுப்பூரசாமி, குப்புச்சாமி, மூரத்தி, பழனிச்சாமி, சுப்பிரமணி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கின் 1. ஆம் எதிரி சேதுபதி மற்றும் 3 ஆம் எதிரி வல்லரசு ஆகியோர்களை சிவன்மலை, சித்தரசம்பாளையம் பிரிவு அருகில் வைத்து கைது செய்து தக்க வழிக்காவலுடம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். மேலும் 2 ஆம் எதிரி கனகராஜ் என்பவரை 12.04.2024 ஆம் தேதி 20.00 மணிக்கு 41A Crpc பிரிவின் கீழ் சம்மன் சார்பு செய்யப்பட்டு காவல் நிலையம் ஆஜரானவரை கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

5. பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சிகள் தங்கமணி, வலுப்பூரசாமி மற்றும் குப்புச்சாமி ஆகியோர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளித்து விபத்து பதிவேடு வழங்கிய காங்கேயம் அரசு மருத்துவமனை மருத்துவர் தியாகராஜன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடுகள் பெற்றுள்ளார்.

6. பின்னர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முதல் நிலைக்காவலர் முத்துக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 கொடுத்த தவறான புகாரின் பேரில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.02.17 18:27:23 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்